**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 220/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | **அ.சா. 4** |
| Name | : | **திருமதி. தனக்கொடி** |
| Father's Name/Husband Name: | | **திரு. பழனிவேல்** |
| Village | : | குடிசல் |
| Taluk | : | **அரியலூர்** |
| Age | : | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி சின்னதுரை ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது குடிசல் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.3 பழனிவேல் என்னுடைய கணவர் ஆவார். அ.சா.1 செல்வி எனது மகள் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 5–6 ஆண்டுகளுக்கு முன்பாக நான் எங்களுடைய கிராமத்தில் இருந்த போது என் மகள் வசிக்கும் கொளப்பாடி கிராமத்திலிருந்து காலை 10 மணியளவில் தொலைபேசி அழைப்பு வந்தது அதில் என்னுடைய மகளை எதிரி சின்னதுரை கம்பியால் அடித்துவிட்டதாகவும் அதனால் என் மகளுக்கு தொடைப்பகுதியில் வீங்கியிருப்பதாக தகவல் வந்ததன் பேரில் நானும் என் கணவரும் சம்பவயிடத்திற்கு வந்தேன் எங்கள் மகள் மயக்கமாக இருந்தாள். அ.சா.3, அ.சா.1னினை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கொளப்பாடியில் என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். யார் எங்களுக்கு போன் செய்து தகவல் சொன்னார்கள்

என்றால் என் மகள் அ.சா.1 செல்வி. எங்கள் ஊரிலிருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தோம் என்றால் மதியம் 12 மணியிருக்கும். அ.சா.1 செல்வி எனது கணவரின் முதல் தாரத்து மகள் என்றால் சரிதான். அ.சா.1 செல்விக்கும் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் பாதை சம்மந்தமாக வழக்கு நடைபெற்று முன்விரோதம் இருக்கிறது என்றாலும் என் மகள் கொடுத்த பொய் புகாருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அ.சா.1யை குச்சியால் அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.